**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.231** **நாள் : 23.08.2025**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இன்று (23.08.3025) மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா. சுப்பிரமணியன் அவர்கள், சோழிங்கநல்லூர் மண்டலம், கண்ணகி நகர் பகுதியில் வசித்து வந்த தூய்மைப் பணியாளர் திருமதி வரலட்சுமி அவர்கள் தூய்மைப் பணிக்காகச் செல்லும் வழியில் மின்சாரம் தாக்கி இறந்ததை முன்னிட்டு, அவரது குடும்பத்தினருக்கு ரூபாய் 20 இலட்சம் நிவாரண உதவித்தொகைக்கான காசோலையினை அவரது குடும்பத்தினரிடம் வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இன்று (23.08.3025) மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா. சுப்பிரமணியன் அவர்கள், சோழிங்கநல்லூர் மண்டலம், கண்ணகி நகர் பகுதியில் வசித்து வந்த தூய்மைப் பணியாளர் திருமதி வரலட்சுமி அவர்கள் அடையாறு மண்டலத்தில் தூய்மைப் பணிக்காகச் செல்லும் வழியில் மின்சாரம் தாக்கி இறந்ததை முன்னிட்டு, அவரது குடும்பத்தினருக்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில் ரூபாய் 10 இலட்சமும், தூய்மைப் பணியை மேற்கொள்ளும் உர்பேசர் சுமீத் நிறுவனத்தின் சார்பில் ரூபாய் 10 இலட்சமும் என மொத்தம் ரூபாய் 20 இலட்சம் நிவாரண உதவித்தொகைக்கான காசோலையினை அவரது குடும்பத்தினரிடம் வழங்கி, ஆறுதல் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.அரவிந்த் ரமேஷ், துணை ஆணையாளர் (பணிகள்) திரு.வி.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., மண்டலக்குழுத் தலைவர் திரு.வி.இ.மதியழகன், உர்பேசர் தலைமைச் செயல் அலுவலர் திரு.முகமது சையத் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தியாளர்கள் சந்திப்பில் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது:**

கண்ணகி நகர் பகுதியில் 30 வயது மதிக்கத்தக்க வரலட்சுமி என்கின்ற சகோதரி அடையாறு மண்டலத்தில் தூய்மைப் பணியாளராக பணியாற்றி வருகிறார். இன்று (23.08.2025) காலை வரலட்சுமி வேலைக்கு செல்லும் போது வழியில் மின்கசிவு ஏற்பட்ட

தேங்கியிருந்த மழைநீரில் கால் வைத்தபோது அவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்திருக்கிறார். இந்த தகவல் கேள்விப்பட்ட உடனே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக அவரை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல சொல்லி, அவர் உயிரிழந்த நிலையில் மருத்துவமனையில் பிரேத உடற்கூறாய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்தக் குடும்பத்திற்கு உடனடியாக உதவிட வேண்டும் என்கின்ற வகையில், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில் ரூபாய் 10 இலட்சமும், தூய்மைப் பணியை மேற்கொள்ளும் உர்பேசர் சுமீத் நிறுவனத்தின் சார்பில் ரூபாய் 10 இலட்சமும் என மொத்தம் ரூபாய் 20 இலட்சம் நிவாரண உதவித்தொகையினை வழங்கிட வேண்டும் என உத்தரவிட்டு, ரூ.20 இலட்சத்திற்கான காசோலை மறைந்த சகோதரி திருமதி வரலட்சுமி அவர்களின் கணவர் திரு.ஜி.ரவி அவர்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டது. இவர்களுக்கு 7ஆம் வகுப்பு படிக்கும் பெண் குழந்தை, 4ஆம் வகுப்பு படிக்கும் ஆண் குழந்தை என இரண்டு குழந்தைகள் தனியார் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு.ரவிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் சென்னை தெற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், சோழிங்கநல்லூர் சட்டமன்ற தொகுதி திமுகவின் சார்பிலும் அவர்களின் எதிர்கால படிப்பு செலவை ஏற்றுக்கொள்ளும் என்று அறிவித்திருக்கிறோம். இந்த இரண்டு குழந்தைகளின் படிப்பு செலவை அவர்கள் விரும்புகின்ற வரை உயர்கல்வி, மேல்நிலைக் கல்வி, கல்லூரி என்கின்ற வகையிலான இந்த கல்வி செலவை திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றுக் கொள்ளும். அதுமட்டுமல்லாது இன்றைக்கான இறுதி சடங்கு செலவை சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் பொறுப்பேற்றுக் கொள்கிறார்.

திரு.ஜி.ரவி அவர்கள் ஏற்கனவே சிறிய அளவிலான உடல் பாதிப்பு உள்ளவர். அவருக்கான சிகிச்சையினையும் தமிழ்நாடு அரசு பொறுப்பேற்று மேற்கொள்ளும். அவரின் மனைவி உர்பேசர் நிறுவனத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார். ரவி அவர்கள் வேலை இல்லாமல் இருந்த சூழலில் உர்பேசர் நிறுவனத்தில் சூப்பர்வைசர் போன்ற ஒரு இலகுவான வேலையை ரவி அவர்களுக்கு தர வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். மாநகராட்சி துணை ஆணையருடைய வேண்டுகோளை ஏற்று அந்த நிர்வாகமும் ஒப்புக்கொண்டிருக்கிறது. திரு.ரவி அவர்கள் இந்த சடங்கெல்லாம் முடித்ததற்கு பிறகு உர்பேசர் நிர்வாகத்தில் சூப்பர்வைசர் போன்ற பணிக்கு பணியில் அமர்த்தப்படவிருக்கிறார்.

சம்பந்தப்பட்ட தமிழ்நாடு மின்வார வாரியத்தின் ஆணையர் அவர்களிடம் பேசியிருக்கிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கண்ணகி நகர் குடியிருப்புப் பகுதிக்கு மூன்று முறை வந்திருக்கிறார்கள். ஒவ்வொரு முறை வந்த போதும் இந்தப் பகுதிகளில் பல்வேறு வகைகளில் குடிநீர் ஆதாரப் பணிகள், மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளை சீரமைக்கும் பணிகள் உள்ளிட்ட பணிகள் ரூ.100 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த மின் இணைப்பு தொடர்புடைய பணிகளுக்கு சம்பந்தப்பட்ட உயர் அலுவலர்கள், திரு.இராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையிலான மின்வாரிய அலுவலர்கள், மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் தலைமையிலான அலுவலர்கள், தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு வாரிய அலுவலர்கள், சேவைத்துறைகளுடன் ஆய்வு நடத்தப்பட்டு, இங்குள்ள குறைகள் சரிசெய்யப்படும் என்று தெரிவித்தார்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**